# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1831/10 - 2013 ඔක්තෝබර් මස 08 වැනි අඟහරුවාදා - 2013.10.08

*1831/10 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### *2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்*

*2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நாணயச் சபையின் 12 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.*

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

கொழும்பு,
*2013 யூலை 26.*

**2013 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை**

*1 1.1* இப்பணிப்புரை 2013 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டி வீதங்கள் ) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளின் உரிமம்பெற்ற ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டும். எடுத்துக்காட்டல்.

*1.2* இப்பணிப்புரையின் ஏற்பாடுகள், இப்பணிப்புரையின் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட ஏதேனும் தவணை வைப்பு, மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் என்பனவற்றிற்கு ஏற்புடைத்ததாதல் வேண்டும்.

*2.2* தவணை வைப்புகளின் மீது நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க ஆண்டு வட்டி வீதம் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு வட்டி வீதங்களின் உயர்ந்த பட்ச மேல் எல்லையினை விஞ்சக் கூடாது. தவணை வைப்பிற் கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்.

| *தவணை வைப்பு முதிர்ச்சிக் காலம்* | *வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லை* | |
|---|---|---|
| ஓராண்டு அல்லது அதற்கும் குறைவானவை | வைப்புக்கள் திரட்டப்படுவதற்கு முன்னைய முற்போந்த காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளரி னால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டுச் சராசரி நிறையேற் றப்பட்ட விளைவு வீதங்கள் | 2.00 சதவீதப் புள்ளி களைக் கூட்டியது |
| ஓராண்டிற்கு மேல் - 3 ஆண்டுகள் | | 2.50 சதவீதப் புள்ளி களைக் கூட்டியது |
| 3 ஆண்டுகளுக்கு மேல் - 5 ஆண்டுகள். | | 3.00 சதவீதப் புள்ளி களைக் கூட்டியது |

2.2 ஆளொருவரிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுமிடத்து அல்லது அவரால் புதுப்பிக்கப்படுமிடத்து அத்தகைய வைப்புக்களை அவர் மேற்கொள்ளும் பொழுது அல்லது புதுப்பிக்கும் வேளையில் அவர் ஐம்பத்தைந்து (55) வயதிற்கு மேற்பட்டவராக இருப்பின் (இதனகத்துப் பின்னர் மூத்த பிரசை எனக் குறிப்பிடப்படுவார்) நிதிக் கம்பனியொன்று மேலேயுள்ள பந்தியின் (2.1) இல் குறிப்பிடப்பட்டவாறான வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லைக்குக் கூடுதலாக ஒரு சதவீதத்தினை விஞ்சாத வட்டியொன்றினை கூடுதலாகச் செலுத்தலாம்.

*சேமிப்பு வைப்புகளுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்.*

3 3.1 எந்தவொரு சேமிப்பு வைப்பின் மீதும் நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் சேமிப்பு வைப்புக்கள் திரட்டப்படுவதற்கு முன்னைய முற்போந்த காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 91 நாள் திறைசேரி உண்டியல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினை விஞ்சக்கூடாது.

3.2 சேமிப்பு வைப்புக்கள் மூத்த பிரசையொன்றினால் பேணப்படுமிடத்து நிதிக் கம்பனியானது பந்தியில் (3.1) உள்ளவாறு வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லைக்குக் கூடுதலாக ஒரு சதவீதப் புள்ளியை விஞ்சாத வீதத்தில் மேலதிக வட்டி வீதமொன்றினைச் செலுத்தலாம்.

*மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழுக்கான உயர்ந்தபட்ச கழிவு வீதம்.*

4. முதிர்ச்சியின் போது மீட்கத்தக்க பெறுமதியிலும் பார்க்க குறைந்த விலைகளைக் கொண்ட மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழ்களின் வழங்கல் மீது நிதிக் கம்பனியொன்றினால் அனுமதிக்கத்தக்க கழிவு வீதம் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள சாதனத்தின் மீதான உயர்ந்தபட்ச ஆண்டு விளைவு வீதத்தினை விஞ்சக்கூடாது.

| *மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழ்களின் முதிர்ச்சிக் காலம்* | *விளைவு வீதத்தின் உயர்ந்தபட்ச மேல் எல்லை* | |
|---|---|---|
| ஓராண்டு அல்லது அதற்கும் குறைவானவை | வைப்புக்கள் திரட்டப்படுவதற்கு முன்னைய முற்போந்த காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டுச் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள் | 2.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| ஓராண்டிற்கு மேல் – 3 ஆண்டுகள் | | 2.50 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| 3 ஆண்டுகளுக்கு மேல் – 5 ஆண்டுகள். | | 3.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |

*படுகடன் சாதனங்களுக்கான வட்டி/ கழிவிடல்/ நறுக்குகளின் உயர்ந்தபட்ச ஆண்டு வீதம்.*

5. படுகடன் சாதனமொன்றின் மீது நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க உயர்ந்தபட்ச ஆண்டு வீதம் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு முதிர்ச்சிக் காலத்திற்கான வட்டி வீதம்/நறுக்கு வீதத்திற்கான உயர்ந்தபட்ச மேல் எல்லையை விஞ்சக்கூடாது.

| *படுகடன் சாதனங்களின் முதிர்ச்சிக் காலம்* | | *வட்டி/கழிவிடல்/நறுக்கின் உயர்ந்தபட்ச ஆண்டு வீதம்* | | |
|---|---|---|---|---|
| ஓராண்டு அல்லது அதற்கும் குறைவாது | | முன்னை காலாண் டுப் பகுதியில் பணிப்பாள ர் னால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டு சராசரி நிறைவேற்றப்பட்ட விளைவு வீதம் | படுகடன் சாதனங்களை வழங்குவதற்கு முன்னர் | 3.50 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| மிதக்கும் வீதம் | ஓராண்டிற்கு மேல் 3 ஆண்டு கள் வரை | | ஒவ்வொரு வட்டி/ நறுக்குக் காலமும் தொடங்குவதற்கு முன் | 4.25 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| | 3 ஆண்டுகளுக்கு மேல் – 5 ஆண்டு கள் வரை | | | 5.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| நிலையான வீதம் | ஓராண்டு மேல் 3 ஆண்டுகள் வரை | | பொதுமக்களுக்கு படுகடன் சாதங்களின் திகதியை அல்லது கழிவிடல் திகதியை அறிவிப்பதற்கு முன் | 425 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| | 3 ஆண்டுகளுக்கு மேல் 5 ஆண்டுகள் வரை | | | 5.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |

6.6.1 பணிப்பாளர் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 இல் முடிவடைகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும் ஏற்புடைத்தான 91 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டு நிறைவேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களை அறிவிப்பார். காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்.

6.2 அத்தகைய வட்டி/கழிவிடல்/நறுக்குக் கொடுப்பனவுக் காலப்பகுதிக்கு ஏற்புடைத்தான காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் நிதிக் கம்பனியினால் ஒவ்வொரு நறுக்குக் கொடுப்பனவுக் காலம் தொடங்குவதற்கு முன்னதாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

7. ஒவ்வொரு நிதிக் கம்பனியும், பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி தவணை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், மாற்றத்தகாத வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் என்பனவற்றிற்குப் பிரயோகிக்கத்தக்க வட்டி வீதம்/கழிவிடல்/நறுக்கு வீதங்களின் விபரங்களை அத்தகைய நிதிக் கம்பனிகள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். அறிக்கையிடல்.

8. இப்பணிப்புரையில் - வரைவிலக்கணம்.

8.1 "தவணை வைப்புக்கள்" என்பது குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மீளக் கொடுப்பனவு செய்ய வேண்டுமென்ற உடன்படிக்கையுடன் நிதிக் கம்பனியொன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்பு எனப் பொருள்படும்.

8.2 "படுகடன் சாதனம்" என்பது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான முறிகள், தொகுதிக் கடன்கள், வர்த்தகப் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள் அல்லது வேறு ஏதேனும் படுகடன் சாதனங்கள் எனப் பொருள்படும்.

8.3 "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

9. 2012 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது. நீக்கப்படுதல்.

10 - 676

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.